உ



# அன்னை
# பத்திரகாளி அம்பாள்
# அருட்பதிகமும், கும்மியும், பஜனைப் பாடல்களும்.


இயற்றியோர்:
கவிஞர் கண்மணிதாசன்



வெளியீடு:
பிரம்மாதின குருகுலம்
ஸ்ரீ காளிபுரம், பெரிய போரதீவு.


30/=

# பதிப்புத்தரவுகள்

பத்திரகாளி அம்மான்
அருட்பதிகமும், கும்மியும்,
பஜனைப் பாடல்களும்.

இயற்றியோர் :
**விஸ்வப்பிரம்மஸ்ரீ**
**வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**
**(கண்மணிதாசன் - ஏரூரான்)**

பதிப்புரிமை :
திருமதி. பார்பதி கண்மணிதாசன்

அச்சகம்:
ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு

வெளியீடு : 14 - 10 - 1994

# காணிக்கை



## நல்லோர் திருவடிக்கு
## இந்நூல் சமர்ப்பணம்

ஸ்ரீ காளிபுரம் பெற்றெடுத்த
பெருமக்களாகிய

சிவஸ்ரீ. தீராம்பரம் (தீராப்போடியார்) (முன்னாள் பூசகர்)
உயர்திரு. விஷவைத்தியமாமணி க. ஆறுமுகம்
உயர்திரு. க. சின்னத்தம்பி (வ. விதானையாரும், பூசகரும்)
உயர்திரு. வே. காளிக்குட்டி
(முன்னாள் காளி கோயில் தர்மகர்த்தா)
உயர்திரு. வே. கந்தையா
(முன்னாள் முத்து லிங்க பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா)
உயர்திரு. கு. முருகேசு (முன்னாள் காளிகோயில் தலைவர்)
உயர்திரு. த. சொக்கலிங்கம்
(முன்னாள் முத்து விநாயகர் ஆலய தர்மகர்த்தா)
உயர்திரு. கா. அமரசிங்கம் (முத்துவிநாயகர் ஆலய தலைவர்)
உயர்திரு. க சாமித்தம்பி (காளிகோயில் உப தலைவர்)
உயர்திரு. முருகுப்பிள்ளை (அம்மாள் தொண்டர்)
உயர்திரு. செ. அரியரெத்தினம் (தேசிய காகித ஆலை)
உயர்திரு. க. சுப்பிரமணியம் அதிபர்
(சித்தயோகி சந்தோச வாத்தியார்)

இவ்வன்பர்கள் யாபேரும் அடியேன் 27-10-77ஆம் ஆண்டு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பூசகராய் வருகை தந்த நாள் முதலாய் நல்லாலோசனை வழங்கி சிறியேனாகிய எனக்கு வழிகாட்டி வான்புகுந்த பெருமக்கள் ஆவர். இவர்களின் பொன்னான திருவடிக்கு இந்நூல்

சமர்ப்பணம்.

ஓம் சக்தி ஓம் பராசக்தி

பெரிய போரதீவு ஸ்ரீ காளிபுரம் அருள்மிகு
பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ செ. பொன்னம்பலம் ஐயா அவர்கள்
உவந்தளித்த

# ஆ சி யு ரை

எங்கள் பெருமதிப்புக்குரியவரும் விஸ்வப் பிரம்ம குலம் செய்த தவப்பயனாய் வந்துதித்தவருமாகிய அன்பிற்குரிய காந்தன் ஐயா அவர்களை 17 வருடங்களாக நன்கு அறிவேன். இவர் எந்நேரமும் கையில் ஒரு புத்தகத்துடன் திரிவார். வாசிக்காத நாளிருக்காது. இவர் வந்ததின் பின்பு நான்கூட இவர் மூலமாக பல விடயங்களை அறிந்திருக்கிறேன். 17 வருடங்களாக நாங்கள் இருவரும் கோயில் தொடக்கம் கிராமம் வரை இணைபிரியாது பணி செய்திருக்கிறோம். இவரின் பக்கத்தில் இருந்தால் எனக்கு ஒரு துணிவு பிறப்பது போல இருக்கும். குழந்தைபோல அன்புள்ளத்தோடு நெருங்கிப் பழகுவார். இவருக்குள் இருக்கும் மாபெரும் தெய்வீக ஆற்றலை நான் கண்டிருக்கிறேன். இத்தகைய தகுதி டைைத்த காந்தன் ஐயா அவர்கள் எத்தனையோ பாடல்களை காளி அம்பாள்மேல் பாடியுள்ளார். அதில் ஒரு பகுதியாகிய பதிகமும், கும்மிப் பாடல்களும், பஜனைப் பாடல்களும் இப்போது புத்தகமாக நமக்குக் கிடைக்கின்றது. இப்பாடல்கள் மனத்தை உருக்குவன. கண்ணீர் வரவைக்கும் கும்மிப்பாடல்கள் இக்கோயில் வரலாற்றினையும், அம்மனின் அருளினையும், பூஜை முறைகளையும் அழகாகவைத்துப் பாடியுள்ளார். காந்தன் ஐயாவின் இம்முயற்சி அம்மன் அருளால் நன்கமைந்து மேன்மேலும் பல பாடல்களை எழுதி நற்புத்தகங்களை வெளியிட்டு சைவத்தமிழ் மக்களுக்கு நற்தொண்டு புரியவேண்டுவதோடு இவரும் இவர் குடும்பத்தாரும் இவருடைய மாணவர்களும் நீண்டகாலம் பல்லாண்டு வாழவேண்டும் என ஸ்ரீ பத்திர காளியம்மாளை பலமுறை வேண்டுகிறேன்.

இவ்வண்ணம்,
செ. பொன்னம்பலம்

பெரிய போரதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,
பல பத்திரிகை ஆசிரியரும், தமிழ் அறிஞருமான
சமூக நல ஜோதி

**உயர்திரு. பூ. ம. செல்லத்துரை**

சமாதான நீதவான் அவர்கள் அன்புடன் உவந்தளித்த

# மதிப்புரை

மீன் பாடும் தேனாடாம் மட்டுநகரில் தோன்றிப் புகழ் பூத்த கவிஞர்கள் பலர் அவர்கள் வரிசையில் ஏறாவூரின் வித்து போரதீவின் சொத்து முத்தமிழின் முத்து கவிஞர் கண்மணிதாசன் ஒருவர் அவர் கவிதைகளில் கனல் கக்கும், கருத்தாழமிகும், கற்பனை வளம் செறிந்திருக்கும், காலத் திற்கேற்ற கருத்துக்கள் கருவுற்று மிளிரும்.

இக்காலத்தில் அரிதாகக்காணும் ஆத்மீகக் கவிஞர்களில் இவர் முதல்வர் எனப் பலரால் பாராட்டப்பட்டவர். அவ ரின் ஆத்மீகக் கவிதைகள் பார்த்து படித்து பரவசமடை ந்த வர்களில் நானும் ஒருவன். அழகு தமிழில் ஆத்மீக கருத்துக் களை அள்ளி விளையாடுவதில் அவர் கைதேர்ந்தவர்.

திரிபுரம் எரித்ததை புராணங்கள் கூறுகின்றன. கண் ணகி மதுரையை எரித்ததை சிலம்பு செப்புகின்றது. அழகிய இலங்காபுரியை அனுமான் அக்கினியால் எரித்ததை இரா மாயணம் இயம்புகின்றது. இவற்றைக் கேட்டறிந்தோமே ஒளிய பார்த்து அனுபவித்து அறிந்ததில்லை. ஆனால் 1983ம் ஆண்டும் 1990ம் ஆண்டும் ஏற்பட்ட இனவெறியாட்டத்தில் நம் தாய்த்திரு நாடான இலங்கையே எரியுண்டு சாம்ப லான காட்சியைக்கண்டு வேதனையால் துடித்தோம் வெந்து சாம்பலாகியது நாடு மட்டுமல்ல நம்மூதாதை கட் டிக்காத்த நாகரீகம் பண்பாடு கலை கலாச்சாரம்.

1983ஆம் ஆண்டு ஈழத்தில் ஏற்பட்ட கொடூரமான காட்சி கவிஞர் உள்ளத்தில் ஏற்படுத்திய குமுறலின் வெளிப் பாடு பல கவிதைகளாக இந்நூலில் வெளிவந்துள்ளன.

1990ஆம் ஆண்டு ஆனி, ஆடி மாதங்களில் நாம் எவ்வ ளவோ கஸ்டங்களையும், கவலைகளையும் தாங்கி கட்டி

எழுப்பிய பெரிய போரதீவு பட்டாபுரம் முனைத்தீவு கிராமங்கள் சுட்டெரிக்கப்பட்ட காட்சியின் வேதனை வித்துக்கள் முத்தான கவியாகி முகிழ்கின்றன இந்நூலில்.

கவிஞர் கண்மணிதாசன் காளிவரம்பெற்ற வரகவியாவார் தேவியின்மேல் அளவுகடந்த பக்தியும் பற்றும் பாசமும் கொண்ட இவர் அன்னையின் அருட்சக்திகளைப்பற்றி அழகாக அனைவர் உள்ளங்களையும் கொள்ளைகொள்ளும் அருட்பா, கும்மி, பஜனைப் பாடல்கள் என பல தலைப்பில் பாடியுள்ளார். இக்கவிதைகளில் ஆத்மீகமுண்டு, வரலாறு உண்டு வாழ்வுக்கு வேண்டிய வாக்குகள் பலவுண்டு.

கவிஞரின் பல நூல்களை வாங்கி ஆதரித்த தமிழ்கூறும் நல்லுலகம் இந்நூலினையும் வாங்கி ஆதரவு நல்கவேண்டுமென மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்,
**பூ. ம. செல்லத்துரை**

''இராசகம்''
பெரிய போரதீவு. 27-09-94.

சிவயோகச் செல்வன் சிவகதா வாரிதி

**த. சாம்பசிவம் அவர்கள்**

உவந்தளித்த

# சிறப்புப் பாயிரம்

அருட்சக்தி அன்னை அவள் அமுதம் உண்டான்
ஆவிபொருள் உடல் எல்லாம் அவளுக்கு ஈர்த்தான்
இருள் கிழியே எழுகதிர் போல் எழுந்திருந்தான்
ஏறாவூர் மண்செய்த தவத்தில் வந்தோன்
பொருள் விளங்கும் மாகவிதை பொழியும் மோகம்
புத்தமுத தமிழ் பெருகும் கங்கை அம்மா
அருள் இனிய என்தம்பி அன்புக் காந்தன்
அவன் தந்த கவிஉண்டு உவந்தேன் அன்றோ.

புத்தத்துள் புத்தகத்தை புகுத்தி நித்தம்
சித்தமெலாம் தெய்வீக சக்தி கூட்ட
நித்தலுமே சக்தியவன் நினைவில் என்றும்
சுத்திவரும் காந்தன் கவி அமுதமம்மா.

இவன் எழுதிவைத்த கைப்பிரதி பலதே
ஏன்அதனை நூலாக்க முடியாதென்றே
இவனி. த்தில் நான்கேட்ட வேளை அன்றோ
இரப்பவர்கள் நல்லதிற்கு இல்லை அண்ணா
தவமில்லா தமிழினத்தில் நாம் பிறந்தோம்
தவறு நாம் செய்திட்டோம் தமிழுக்கன்றோ
புவியினிலே ஓர்நாள் உண்மை தோன்றும்
புத்தகமாய் பலதுவரும் பொறுத்திருப்போம் என்றான்.

தம்பி அவன் சொன்னதிலும் உண்மை உண்டு
நம்பிநான் இருக்கின்றேன் நல்லோர்கள் வரும் வரைக்கும்
அப்புவியில் தமிழின்பம் சுவைக்கும் நாளில் நாமெல்லாம்
இம்மையிலே சாவாத நிலைபெறுவோம் இதுஉண்மை.

''காந்தன் என்னும் கண்மணிதாசன் செப்பு''
இக்கவிதைகள்
பந்தமாய் வாழ்க பல்லாண்டு.

இவ்வண்ணம்,
**த. சாம்பசிவம்**

சித்தாண்டி திருத்தலப் புராணம், ஆரையூர்க் கோவை,
கந்த விரத அம்மானை, தமிழ்த்தாய்க் காவியம்
ஆகிய நூல்களின் ஆசிரியரும்,
முதுதமிழ்ப் புலவரும், கவி மணியும், இலக்கிய மா மணியுமான
ஆ ரை ந ல் லூ ர்
நல். அழகேச முதலியார் அவர்களின்

# சிறப்புப் பாயிரம்

பொன்போல ஒளிநிலவும் மேனி மீது
பூணூலும் வெண்ணீறும் களபச் சாந்தும்
மன்னமக்க மணிநெஞ்சில் ஜெபம் செய்விக்க
மலர்க் கரத்தில் மலம்நீக்கும் மறைஇலங்க
தன்மநெறி புகட்டு சிவசமய சீலம்
தரணிஎங்கும் வியாபிக்க போதனைகள் செய்து
அன்பிதயம் கொள்காந்தக் குருக்கள் சொந்த
அரிய திருப்பாவிசைக்கின் வாய் மணக்குமம்மா.

இவ்வண்ணம்,
நல். அழகேச முதலியார்
(சமாதான நீதிபதி)

ஆரையூர்.
24-08-1994.

# பாடலைப் படிக்குமுன்

நாயேன் செய்த முற்தவத்தின் பேரால் என்தாயின் திருவடி நிழலில் நின்று அன்னை காளியை என் மானசிக தெய்வமாக ஏற்றுக்கொண்டேன். பிறந்து 40ம் நாள் என் தாய் ஏறாவூர் மான்சோலை பெரும்பதியில் கோயில் கொண்டு அருள் வீசும் பத்திரகாளி அம்பாளின் ஆலய மண்டபத்துள் என்னைக்கி_த்திய நாள் தொடக்கம் இன்று வரை என் உடல் பொருள் ஆவி எல்லாம் அந்த காளியே என் வாழ்வும் என் அறிவும் என் வளமும் அவள் இட்ட பிச்சைகள் அந்தப் பிச்சையின் ஒரு துளியே இப்பாடல்கள். ஏரூர் காளியின் நிழலில் தவழ்ந்த என்னை 77ம் ஆண்டு போரூர் காளி அன்னையின் நிழலில் தங்கினேன். அந்த அன்னையின் அன்பு மூத்த மகனின் தொண்டில் ஈடுபட்ட என்னை நிறைவாக வாழவைத்தாள். அந்தத் தாயின் கருணையில் திளைத்த நான் என்னை மறந்து அந்த அன்னையின் மேல் பாடல்களை பாடினேன். அப்பாடல்களில் 83ஆம் ஆண்டு இலங்கை மாதா இரத்தக்கண்ணீர் சிந்தியது கண்டு நொந்தன என்னுள்ளம். அந்த வேளையில் தமிழர்களுக்கு ஏன் இந்த துன்பம் வரவேண்டும் என்று கேட்டது அதற்குப் பதிலும் கிடைத்தன. ஆம் இவர்கள் தங்களை மறந்து தன் அன்புமயமாகிய சமயத்தை மறந்து போட்டி, பொறாமை, சாதி, குடி, குலம், பட்டம், பதவி, கௌரவம், உயிர்பலியிடுதல், பெற்றோரைக்கனம் பண்ணாமை, பெற்றோரை நிந்தித்தல், புறம் கூறுதல் ஆகிய தீய குணங்கள் தமிழர்தம் நெஞ்சில் புகுந்த காரணத்தால் அகத்தில் நிறைந்த தீ அகதியாக்கிய நிலைகண்டு அழுது பாடிய பாடல்தான் எட்டு அறப்பாடங்கள். இவை காளிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் பாடி நொந்திருக்கின்றேன். இப்பாடல்கள் பல அதிசயங்களைச் செய்தது. தீயோர்களுக்கு தண்டனை கொடுத்தது. அதன் பின்பு 11-06-90ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வன்செயல் இக்காளி புரத்தையே அழித்தது. தீ உண்டது அந்தவேளை பல அனர்த்தங்களையும் உயிர் இழப்புகளையும் கண்ட இக்காளிபுரம் அந்த வேதனையில் விழிம்பிலே வாழ்ந்த மக்கள் இடையூறுகள் வராமல் அன்னை காளிக்கு மாபெரும்

சக்தி யாகத்தைச் செய்தார்கள். அந்த யாகத்தை நடத்தும் பொறுப்பை அம்பாள் எனக்கிட்டிருந் தாள். அந்த வேளையில் என் மனதில் ஏதோ ஒரு சக்தியின் விழிப்பு எழுந்தன. அந்த விழிப்பில் எழுந்த பாடலே யாகப் பதிகம். 10 நிமிடத்தில் அந்தக் காளி அன்னை இட்ட பிச்சை இப்பாடல். அதன்பின்பு எனது மாணவர்கள் பஜனை பாட வேண்டும் என்று முயற்சித்தார்கள். அந்த முயற்சியின் விளைந்த பயிர்களே ஆலய வரலாற்று கும்மிப் பாடல் மற்றும் பஜனைப் பாடல்களும். இப்பாடல்களை உங்கள் கைகளிலும் மனங்களிலும் தவளவேண்டும் என்ற ஆசையின் வேட்கையே இந்நூலாக வெளிவருகின் றது. இந்நூலுக்குப் பலபேர்கள் துணையாளர்கள் அவர் கள் என்நெஞ்சில் என்றும் இருப்பவர்கள் என்றும் வாழ் பவர்கள் நான் கவிதைகள் சொல்லச் சொல்ல எழுதிய என் அன்பு மாணவர்களாகிய ப. சுந்தரலிங்கம், செ. கீர்த்தி ராஜா ஆகியோருக்கும் இப்பாடல்களை பக்தியுடன் பாடி அம்மன் முன் பஜனை குழுவினர்களாக பணி செய்யும் அன்பு சகோதரர் பூ. துரையப்பா மற்றும் பாரதி வித்தி யாலய மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் அபிராமி பூசைகளில் இப்பதிகத்தைத் தொடர்ந்து பாடிவருகின்ற ஸ்ரீ காளிபுரம் மாதர் ஆத்மீக பணிமன்றத்தினருக்கும் 90ஆம் ஆண்டு ஸ்ரீ காளிபுரம் அருள்மிகு பத்திரகாளி அம் பாள் ஆலயத்தில் நடைபெற்ற மகாசக்தி யாகத்தை மிகத் திறம்பட நடத்தி விஸ்வப்பிரம்ம குலத்தின் மாண்பினை மீண்டும் தழைத்தோங்கச் செய்வதற்காக அடியேனின் ஆலோசனையின் பேரில் அறியாமையின் மூடத்தனத்தால் சிறப்பை உணராமல் கண்ணார்களின் தெய்வீகக் கொடி யாகிய அனுமார் கொடியினை மரண வீடுகளில் மட்டும் கட்டி பாவத்தையும் சாபத்தையும் பெறும் நிலையைமாற்றி அத்தெய்வீகக் கொடியை ஆலய வருடாந்த விழாவில்ஏற்றி மறைந்துபோன கண்ணாளர்களின் வாழ்வுக்கு வழிசமைக்க முனைந்த ஆற்றலும் துடிப்புமிக்க செயலாளராக பணி யாற்றிய நா. சிவலிங்கம் அவ்வாண்டுத் தலைவர் சீ. இரா ஜேந்திரம் ஆகியோருக்கு என் இதயபூர்வமான நன்றிகள் என்றும் உரித்தாகுக மற்றும் 17 வருடங்களாக என் அன் பிற்குப் பாத்திரமாகி அம்பாளின் அருட்தொண்டராக கடமையாற்றும் ஆலய பிரதம பூசகர் செ. பொன்னம்பலம் ஐயா அவர்கள் இந்நூலுக்கு ஒரு ஆசியுரை தந்துள்ளார்.

அவருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள். அடுத்து எனக்கு எப்போதும் உறுதுணையாக இருந்து உதவிபுரிந்து வருகின்ற அன்புக்குரிய அண்ணன் சி. வன்னமணி அவர்கட்கும் சிவயோகச் செல்வன் சாம்பசிவம் அண்ணன் அவர்கட்கும் பிரம்மாதின குருகுல முதல் மாணவனாகவும் சேவையே ஜீவசேவையாகவும் அதுவே தெய்வ சேவையாகவும் கொண்ட மாணவர் விஸ்வப் பிரம்மஸ்ரீ செ. சற்குணராஜா ஐயா அவர்கட்கும் செல்வன் ஏ. குமாரலிங்கம் (B.A.) அவர்கட்கும் மற்றும் குருகுல மாணவர்களுக்கும் இந்நூலுக்கு சிறந்த மதிப்புரை தந்த அன்புசால் திரு. பூ. ம. செல்லத்துரை சமாதான நீதவான் அவர்களுக்கும் எப்போதும் என்னோடு தோளோடு தோள்நின்று நற்பணிகள் புரிந்துவரும் ஸ்ரீ காளிபுரம் இளைஞர் முத்தமிழ் இந்து கலாமன்ற அன்புத் தம்பிகட்கும், செயல் திறனும் துடிப்பும் குருபக்தியும் நிறைந்த ஸ்ரீ காளிபுரம் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. ப. புவனகேசரி (விஸ்வையா) அவருக்கும், மற்றும் மு. சோமசுந்தரம் (பொருளாளர்), மற்றும் பரிபாலன சபையினருக்கும் காளி கோயில் பரிபாலன சபையாருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக. இதற்கு மேலாக எனது பணிகளுக்ெல்லாம் உயிர்த்துணையாக இருந்து செயல்படுகின்ற என் அன்புத் துணைவியார் அவர்கட்கும் நன்றிகூறக்கடமைப்பட்டவன் நிறைவாக இந்நூலை முழு நூலாக்க எழுத்துப் பணிகளில் உதவிபுரிந்து சிரமங்கள் பாராது செயல்பட்ட செல்வன் வெல்லலூர் தவ. யோகநாதன் அவர்கட்கும் அன்பு மாணவி செல்வி கணேசன் அவர்கட்கும், மற்றும் இந்நூலை வாங்கிப் பக்தியுடன் பாடும் அனைத்து மெய் அன்பர்கட்கும், இந்நூலை அழகான முறையில் அச்சிட்டுத் தந்த, ஆதவன் அச்சக உரிமை அன்பருக்கும், ஊழியர்கட்கும் என் இதயம் கனிந்த நன்றிகளும் இறையருளும் கிடைப்பதாகுக.

இவ்வண்ணம்,

**என்றும் உங்கள் அன்பின்,**

**கண்மணிதாசன்**

# பதிப்புரை

ஸ்ரீ காளிபுரம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மேல் திருவருள் சக்தியின் உந்துதலால் எனது கணவர் கவிஞர் கண்மணி தாசன் அவர்களால் பாடப்பட்ட அறப்பாடல்கள், பதிகம், கும்மி, பஜனைப் பாடல்கள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடும் வாய்ப்பை அம்பாள் எமக்கு அருளியுள்ளாள். இதை வெளியிடும் பிரம்மாதீன குருகுலத்தின் மாணவர்களின் உழைப்பும், ஊக்கமுமே இன்நூலாக வெளிவருகின்றது. எனவே இந் நூலுக்கு ஆதரவு வழங்கி அன்னை சக்தியின் அருள் மழையில் தோய்ந்து இன்புறுவீர்களாக.

இவ்வண்ணம்,

நூலை வெளியிடும் பொறுப்பிலுள்ள,

**திருமதி. பார்வதி கண்மணி தாசன்**

அன்னை கண்மணி நூலகப் பொறுப்பாளர்

ஸ்ரீ காளி புரம்.

## ஸ்ரீ முத்து விநாயகர் துதி

நித்தம் எனை ஆண்டருளும் ஞானஜோதி
நினைவினிலே கனிவாகி கலந்த சக்தி
முத்தமிடும் ஞானசிவ மூலமானோன்
முகிழ்கின்ற மூலத்துள் மூர்த்தி யாவான்
சித்தி புத்தி வல்லபைதன் சிவமேயாவான்
சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தெய்வ மாவான்
பக்தி நிறை காளிபுர பதியில்மேவு
பத்திரையின் மூத்தவனை பணிதல் செய்வாம்.

காலத்துள் காலம்என கடந்த மூலம்
காரியத்துள் காரணனாய் கலந்த மூர்த்தி
ஞாலத்தை கரம்தாங்கி நல்கும் போதன்
நான் மறைக்கும் எட்டாத மூலவேதன்
சீலமை தவமடியார் போற்றி ஏற்று
சீரானை முகத்தானை சீரைங் கரத்தானை
வாலமா காளி சக்தி வலப்புறத்தானை
வருமுத்து சித்தியனை பணிதல் செய்வாம்.

## ஈன்றோர்க்கு இதய அஞ்சலி

முந்தை தவத்தின் முகிழ் பிணைப்பினால்
முந்தும் தம்வாழ்வின் தெய்வ நலத்தினால்
இந்தப் புவியில் ஏழைஎனைப் பெற்றெடுத்து
இன்னறிவு நலமருளி என்னாழு மென்
சிந்தையினில் தெய்வமென நின்றிலங்கும்
சீரத்தின கோபால கண்மணி யெனும்
தந்தைதாய் பதமலரை தமியேன் என்றும்
தலைமிசையில் சூடி தரணிதனில் வாழ்வேன்.

இந்நூலாசிரியராகிய கவிஞர் கண்மணிதாசன் அவர்கள் 83இல் நடந்த தமிழர்களின் துன்ப நிலைகண்டு நெஞ்சுருகி போரதீவு பத்திரகாளி அம்பாள் மேல் 14 09—83 தொடக்கம் வெள்ளிக் கிழமைதோறும் அறப்பதிகமாக பாடியபோது பல சம்பவங்கள் நடைபெற்றன.

## அறப்பாடல்கள்

உலகமெலாம் காக்கின்ற தாயேயென் றுணராமல்
உளயிருள் கொண்ட இழியோர்
தன்னாசை தீரவே உன்னாலயம் தன்னில்
தறுக்காடி நின்ற நிலையோ
மலமான இழிசெயல் மாண்புற கோயிலில்
மறவர்கள் செய்த நிலையா
மக்களென்று அறியாமல் சாதியால் தள்ளிடும்
மனித குலம் அற்ற விதமோ
தலமென்று உணராமல் குலங்களைக் கூறிடும்
தலைக்கனம் கொண்ட சதியோ
தமிழர்கள் செய்திட்ட குற்றமெலாம் பொறுத்து
தாயே நீ அருள் சுரட்பாய்
நலமெலாம் தத்தெமை போரேறு தீவிலே
நலமாக ஆளும் அரசி
நலிவுசெய் வெறியோர் மெலிவுபட் அழியவே
நாயகி பாருமம்மா.

கோயில் என்றுணராமல் குடிமரபு கூறி
குந்தகம் விளைந்த பழியோ
குலவு நற் தெய்வம் என்றறியாமற் பேய்களை
கொண்டாடி வந்த செயலோ
வாயிலா ஜீவனை தன்னாசை தீரவே
அறுவோங்கும் ஆலயத்தில்
வாதையே செய்து நின் பலியென்று
வஞ்சகர் செய்த சதியா
தாயென்று மதியாமல் போதையின் வெறியால்
தவறுகள் செய்த வினையா
தக்க பெரியோர் தம்மை நிந்தித்த காரணத்
தன்மையால் வந்த பழியோ
நீ ஒன்றும் அறியாமல் இருப்பவள் இல்லையே
நீதியே ஜோதி வடிவே
நஞ்சகப் பிழை செய்து அஞ்சியே அழிகின்ற
நிறை குலம் காத்தருள்வாய்.

தெய்வருள் சக்திகள் இல்லையென்று கூறி
 தினம் வாதம் செய்த மூடர்
தீமைகள் புரிந்து மனவேதனை உறுத்தலால்
 தீவினை சாபத்தீயோ
மெய்தெய்வ பெற்றோர்கள் மென்மனம் நோகிட
 மிகு துன்பம் செய்த பிழையா
அறிவான தெய்வமாம் குருவான பெரியோரை
 அவமதித் திட்ட பழியோ
பொய் உரைத்தே பொருள் ஈட்டியே
 நன்மைக் கீந்திட்ட வினைப்பயனோ
பேரின்ப இந்துமத தத்துவம் அழியாமல்
 பேயினை தொழுத செயலோ
உய்யவே எமையாளும் தெய்வமென நடமாடும்
 ஓங்கார சக்தி காளி
உன்னவர்கள் செய்திட்ட பிழையெல்லாம் பொறுத்திங்கு
 உத்தமியே அருளுமம்மா.

அதர்ம வெறிகொண்ட இழியோர் அட்டகாசத்தை
 அறியாத காளியா நீ
ஆணவச் செருக்கோடு அரக்கர்கள் செய்அழிவெல்லாம்
 தெரியாத தேவியா நீ
மதவெறி கொண்டகரி போலவே நாட்டைஅழி
 மல்லாடு ஈனரம்மா
மங்காத துங்கநற் ஆலயம் எல்லாம்
 மறியோடு தகற்கு நிலையோ
பதைபதைத்து தமிழர் பரிதவித்தோடவே
 பார்த்திருப்ப துனக்கழகோ
பாலுறவு கொண்டே விட்டுச் சரிகின்ற
 பரிதாபம் பாருமம்மா
இதமுடைய தெய்வமாய் இன்தமிழர் தொழுதற்கு
 இரங்காத தன்மை ஏதோ
எழில்தங்கு பேரேறு தீவின் மிசைவாழ்கின்ற
 ஈஸ்வரி காருமம்மா.

ஆண்டாண்டு காலமாக எம்குலம் அழிவதா
 அன்னை நீ பார்ப்பதில்லையா
ஆழவரும் ஆட்சிகள் தமிழர்தம் உரிமையை
 அடிமையாய் விற்பதழகா

தூண்டியே அயலவர் செந்தமிழர் சொத்தை
சூறை செய்தடித்தல் நலமா
சுகமெலாம் இழந்துநாம் அகதி நிலையாகியே
தொல்லை பட்டழிதல் அழகா
மீண்டுமெம் நாட்டையே மேவியே ஆள்கின்ற
மேன்நிலை ஒன்றுமிலையா
மிகுவாதை பட்டுயாம் செந்நீர் வடித்தோம்
மேவி எமைப் பாருமம்மா
வேண்டுவார்க் கருள் சுரந்தாள் கின்றபேரேறு
தீவின் மிசை ஆடுதேவி
வெறியர்கள் சிதறவே உன்பலம் அறியவே
வீரிநீ விழி திறப்பாய்.

வீடு பொருள் செல்வசுகம் யாவையுமிழந்து
நாம் வெறுமையாய் நிற்பதழகா
விம்மியே கதறிட வெறியர்கள் சுட்டு
நெருப்பினில் எரித்தல் தகுமா
நாடுகொடு மன்னனால் ஆட்சியில் தமிழர்கள்
நலிவுற்று மடிவ தழகா
நற்தெய்வ மாதர்கள் கற்பினை இழந்து
நடுவீதி நிற்கு நிலையோ
வாடுமித் தமிழர்கள் துன்பநிலை கண்டுமே
வஞ்சி நீ பொறுப்பதழகா
வாதை செய்வோருடல் கூறுபட்டழியவே
வல்லவி பாருமம்மா
ஆடல்புரி நீடுபுகழ் பேரேறு தீவின்மிசை
ஆடுமாதங்கி நீலி
அகதியாய் தமிழர்கள் மீண்டுமிங்கு அழியாமல்
அன்னையே பாருமம்மா.

அருளான நின்திருக் கண்ணிலே நெருப்பெழ
ஆயுதம் கரந்துலங்க
ஆனபேய் பூதங்கள் யாவுமே சூழ்ந்திட
அவனி எல்லாம் நடுங்க
ஒருகோடி சூரியர் கதிரொளி வீசவே
ஓங்குமரி மீது வருவாய்
உத்தண்ட சண்டிநீ சக்திமா காளிநீ
நரசிங்க ரூபி வடிவி

பெருமனச் சாட்சியின் பேரின்ப நீதிநீ
பேசாமல் இருத்தல் அழகா
பெருகிவரு துன்பக் கொடிய நிலைகண்டுமே
பெண்ணரசி பாராதிருப்பதோ
கருவறுத்தே வெறியர் குலமெலாம் அழிப்பாய்
கருநாக வடிவாகி நின்று
கதறிட கொடியோர் கடுமுத்தை வீசாயோ
காளியே மாரி சக்தி

நின்கோயில் உடைத்திடு நீசர்கள் சிதறவே
நீலியே விழிதிறப்பாய்
நிர்க்கதி நிலையாகி நின்றிடும் தமிழர்கள்
நிலை மாற வாருமம்மா
தன்மையில்லா தரக்கர் தலையுருண்டோடவே
சாமுண்டி பாருமம்மா
தறுக்கர் குலம் அழியவே தீப்பொறி பறந்திட
சக்தி நீ பாருமம்மா
பெண்மை இனம் அழிவதா நீ பேசாதிருப்பதா
பெருவாழ்வு நாமிழப்பதா
பேசுபொற் கொடியனைய மாகாளி அன்னையே
பித்தன்என் கவிதை கேளாய்
இன்முகம் காட்டி எமை காத்திட வருகுவாய்
ஏகாந்த நாத வடிவே
எட்டறம் கெட்டோரை பட்டழித்திடவே
இக்கவிக் கிரங்குமம்மா.

# அம்மாள் அருட் பதிகம்

குறிப்பு: பதிகம் பாடும்போது யாக வேளையில் 'யாகமதில் தோற்றுவாயே' எனவும் மற்ற வேளையில் 'வந்தெமக்கு அருள் செய்வாயே' என்று பாடவும்.

சீர்மேவு போரேறு தீவிலென்றும்
செப்பரிய சக்திவடி வாகவந்து
ஊர்மேவ கோயில் கொண்டருளே வீசும்
ஓங்கார சக்தியின் மேல் பதிகம்பாட
பார்மேவும் மூத்தநற் தனயனாகி
பத்தினியின் வலப்பக்கம் உறைந்த மூர்த்தி
பேர்மேவு முத்துலிங்க கணபதியே
பிரணவமே யாகமதில் தோற்றுவாயே.
(அல்லது வந்தெமக்கு அருள் செய்வாயே)

அன்புடனே அடியார்கள் நித்தம் வந்து
அன்னையே உனக்கபயம் என்று போற்றி
சென்னியிலே உனது திருப்பாதம் சூடி
தீவினைகள் யாவினையும் தீர்க்க வென்று
என்னாளும் உனதுதிருக் கோயில் நோக்க
ஏந்திளையே நீபாராதிருப்ப தேனோ
செந்நெல்விளை கழனி சூழ் போரதீவில்
தோவியே யாகமதில் தோற்றுவாயே.

ஆர்எமக்கு துணையம்மா இந்த மண்ணில்
அனியாய துன்பங்கள் பலவும் வந்து
சீர்வாழ்வு தனையிழந்து சிக்கிக்கொண்டு
சிதறுகின்றோம் என்னாளும் உலகில் அம்மா
காரணியே நீ இந்த கவலை கண்டு
கண்பாரா திருப்பதுவும் நியாயமோதான்
நாரணியே போரேறு தீவில் வாழும்
தெய்வ நாயகியே யாகமதில் தோற்றுவாயே.

இழி நிலையில் எனதுமனம் நித்தமே ஆழ்ந்து
ஏராளமான பல குற்றம் செய்து
பழிபாவக் கொலை களவு காமநோக்கம்
பஞ்சமா பாதகங்கள் செய்துமேதான்
அழிவதனை வாழ்வாகக்கொண்டு வாழும்
அடியார்கள் உனது பதம் துதித்துமேதான்
வழிமுறையில் வாழ்வதற்கு அருளே செய்ய
வல்லவியே யாகமதில் தோற்றுவாயே.

ஈஎன்று வருபவரின் முகத்தைப் பாரா
திரும்புமனம் கொண்டுமேநாம் வாழ்ந்தேவந்தோம்
தாயென்று மதியாமல் உந்தன் முன்னால்
தவறுகள் நாம்செய்திட்டோம் தாயே அம்மா
நீஒன்றும் அறியாத நீவியாமோ
நீதிவடிவான சிவசக்தி தாயே
சேயேன்கள் எமைக் காக்க போரதீவில்
சேயிழையே மாகமதில் தோற்றுவாயே,

உலகமதில் கொடுமை பல பட்டோமம்மா
உனது திருநாமத்தை மறந்தே வாழ்ந்து
நலமிழந்தோம் சுகமிழந்தோம் நலிவுபட்டோம்
நற்பொருட்கள் பலஇழந்து அகதியானோம்
கலகத்தால் வந்த வினை பலவும் கண்டு
கண்பாரா திருப்பதுவும் நியாயமோ தான்
பலம் நிறைந்து நாம்வாழ போரதீவில்
பராசக்தி யாகமதில் தோற்றுவாயே.

ஊழ்வினையோ பெரியோர்தம் சாபக்கேடோ
உனைமறந்த காரணத்தால் வந்ததீயோ
நாள் வினையோ தந்தைதாய் சாபக்கேடோ
நவக்கிரக தோசத்தால் வந்த தீயோ
ஏழ்பிறவி தோறும் நாம்செய்த குற்றம்
ஏந்திழையே நீபொறுத்தருளே செய்ய
காளிதேசம் எனப்புகழும் போரதீவில் தெய்வ
காரணியே யாகமதில் தோற்றுவாயே.

என்றுமுன் மெய்யடியார் அழுத கண்ணீர்
ஈஸ்வரியே உன்பாதமலர் அதனால் கழுவி
கன்றதுவோ தாயிழந்து வருந்துமாற்போல்
காளியுனை காணாது வருந்துகிறோம்
இன்னுமிவ் ஏழையடியார் அழுமுகத்தை
எமையீன்ற தாயேநீ பாராதிருப்பதேனோ
வன்செயல்கள் மாறி இவ்வுலகில் அமைதிகாண
வல்லவியே யாகமத்தில் தோற்றுவாயே.

ஏரணிசூழ் அழகுதிரு அன்புபூண்டு
என்றுமுன் அடியார்கள் வாழ்ந்த மண்ணில்
காரணியே நீ பகைத்த காரணத்தால்
கனவிலும் நாம் எண்ணாத துன்பமுற்றோம்
சீரணியாய் திகழ்ந்திட்ட காளிதேசம்
தீயினுக் கிரையாகி போனதம்மா
பூரணியே அருள்மேவு போரதீவில்
புண்ணியமே யாகமத்தில் தோற்றுவாயே.

ஐம்புலனும் உள்ளடங்க கண்ணீர் வார
அகம்மலர்ந்து அன்புகொள் பக்தி ஓங்க
செம்மையுறு உனதுதிரு பாதம் தன்னில்
சென்னியினை யாம்வைத்து அடிமையாகி
இம்மையிலே யாம்வாழும் வகையைக் கண்டோம்
இனிதுன்பம் வாராமல் காக்க வேணும்
உம்பர் தொழும் அம்பிகையே உலகமாதா
ஓங்கார சக்தியே யாகமதில் தோற்றுவாயே.

ஒற்றுமையாய் நாம்வாழ வழியே செய்து
உண்மையறம் அன்பு மெய்பக்தி ஓங்க
வேற்றுமைகள் எமைநோக்கி வாராவண்ணம்
விரும்புமுளப் பாசத்தால் நேசம் கண்டு
சாற்றுமுன் திருநாமம் தினமே ஓதி
சஞ்சலங்கள் வாராத மருந்தே யானாய்
கற்றோர்கள் புகழ்ந்தேற்று போரதீவில்
காலபைரவியே யாகமத்தில் தோற்றுவாயே.

ஓங்கார நாயகியே வருக வருக
உத்தமியே அருட்சக்தி வருக வருக
பாங்கான றீங்காரி வருக வருக
பக்தியது புவியில் நிதம் தழைக்க வருக
ஆங்கார குணம் போக்கி ஆழவருக
அபிஷேகக் காரணியே வருக வருக
நீங்காமல் எமையாழப் போரதீவில்
நீலியே யாகமதில் தோற்றுவாயே.

ஔவென்ற மந்திரத்தின் பொருளே யானாய்
ஐங்கிலியும் சக்தியென அருளே யானாய்
உவ்வென்ற சக்கரத்துள் ஒலியே யானாய்
உண்மையறம் காப்பதற்கு காளியானாய்
கௌவ்வைபிணி தீர்ப்பதக்கே இங்கே யாழ்வாய்
கண்ணீரைதான் துடைக்க கருணை யாவாய்
கொவ்வையிதழ் வடிவாளே ஞானசக்தி
கொடுமைகள் அகல யாகமதில் தோற்றுவாயே.

அஃகாரத்தின் வடிவாளே உனக்கபயம் அபயமம்மா
அன்பு மெய்யடியார்கள் உனக்கபயம் அபயமம்மா
இக்கலியின் கொடுமைபோக உனக்கபயம் அபயமம்மா
ஏகாந்த ஜோதியே உனக்கபயம் அபயமம்மா
துக்கபிணி மரண கொடு துன்பம் போக
தூயவளே உனக்கபயம் அபயமம்மா
மிக்கபுகழ் ஓங்குமெழில் போரதீவில்
மேதினி குளிர யாகமதில் தோற்றுவாயே.

# கும்மிப் பாடல்கள்

1. சீர்மேவு போரேறு தீவினிலே - எங்கள்
   தேவி பராசக்தி கோயில் கொண்டாள்
   பேர்மேவும் அன்னையின் பாதத்தை போற்றியே
   பெற்பொடு கும்மி நாம் பாடிடுவோம்.

2. சக்தி தயாபரி பத்திர காளிமேல்
   பக்தியுடன் கும்மி பாட்டுரைக்க
   சித்தி புத்தி மகிழ் முத்து விநாயகர்
   சீர்பாதம் நித்தமும் காப்பாமே

3. ஆதிபராபரி அம்பிகை சுந்தரி
   அந்தரி மேற்கும்மி பாட்டிசைக்க
   மாது தயாபரி பார்வதி தந்தருள்
   மாணிக்கப் பிள்ளையார் காப்பாமே.

4. சூலத்தை ஏந்திடும் துர்க்கை பராசக்தி
   தூயவள் மேற்கும்மி பாட்டிசைக்க
   காலத்தை வென்றிடும் மாகாளி தந்திடும்
   கற்பகப் பிள்ளையார் காப்பாமே.

5. சிங்கார போரேறு தீவினிலே ஆழும்
   தேவியின் மேற்கும்மி பாட்டிசைக்க
   கங்கை மதிசூடும் வெல்லா வெளிப்பதி
   கல்லடிப் பிள்ளையார் காப்பாமே.

6. அக்கினி தன்னிலே தானுதித்த எங்கள்
   ஆதியின் மேற்கும்மி பாட்டிசைக்க
   தக்க புகழ்மேவு கொக்கட்டி சோலையின்
   தான்தோன்றி ஈஸ்வரர் காப்பாமே.

7. இத்தரை தன்னிலே எங்களை ஆண்டிடும்
   ஈஸ்வரி மேற்கும்மி பாட்டிசைக்க
   சித்தினை நல்கிடு வெள்ளை நாவற்பதி
   சித்திர வேலவர் காப்பாயே.

8. வெள்ளி மலையிலே வீற்றிருக்கும் - எங்கள்
வித்தகி மேற்கும்மி பாட்டிசைக்க
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் - அன்னை
வாலை சரஸ்வதி காப்பாமே.

9. தொழுதிடும் பக்தரின் துயரினைப் போக்கிடும்
துரந்தரி மேற்கும்மி பாட்டிசைக்க
பழுகாமப் பதிமிசை மேவியே ஆண்டிடும்
பார்த்தனின் சாரதி காப்பாமே.

10. மட்டக்களப்பிற்கு தென்புறத்தில் எங்கள்
மாது தயாபரி கோயில் கொண்டாள்
எட்டுத் திசையிலும் பேர்விளங்கும் தெய்வ
ஏந்திழை பாதத்தை போற்றுவோமே.

11. காந்தமதில் ஆழும் மாந்தையிலே - தெய்வ
கம்மியற்கு குல தெய்வமாகி
சேர்ந்த பதியெல்லாம் உற்ற துணையான
தேவியின் பாதத்தை போற்றுவோமே.

12. கட்டடையல் பூசை கொண்டவளாம்
விஸ்வ கம்மியற்கு குல தெய்வமவள்
இட்டவரம் தந்து எங்களை ஆண்டிடும்
ஈஸ்வரி பாதத்தை போற்றுவோமே.

13, எருவில் நகராண்ட கம்மியர்கள் - பின்பு
ஏற்றமதாய் இங்கு வந்தமர்ந்து
பெருமை மிகுந்திடு கிழவியா பிட்டியில்
பெற்புடன் குடிமனை தானமைத்தார்.

14. போறேறு தீவென்று பேர் விளங்கும் இந்த
புண்ணிய நற்பதி தன்னிலே
சீரேறும் மாகாளி கோயில் கொண்டாள் - அன்னை
அன்னை தெய்வ அருட்திறம் பாடுவோமே.

15. முன்னாளில் மாகாளி தேசமென்று இங்கு
முறையோடு மன்னர்கள் ஆண்ட இடம்
இன்னாளில் போரேறு தீவதென்று பெரும்
ஏற்றம் விளங்கிடும் நற்பதியாம்.

16. மூன்று இடங்களில் கோயில் வைத்து · தெய்வ
சக்திக்கு முறையாக பூசை செய்து
ஆண்டுகள் மாறிட இந்த இடம் தன்னில்
அழகான நற்கோயில் தானமைத்தாள்.

17. வடக்கு திசைவாயில் கோயிலடி அங்கு
வண்ண வண்ணக்கலை சிற்பமடி
இடமான இடம் என்று அடியார் உரைத்திடும்
எழில்மிகு ஆலயம் இதுதாண்டி.

18. ஆதியில் இங்கு பூசை செய்ய ஒரு
ஆளின்றி ஊரார் கவலையுற
ஏதுமறியாத சொக்க நாதருக்கு
ஈஸ்வரி கனவினில் தோன்றினாளே.

19. உலை முகத்து முன் முகப்பினிலே - ஏழு
ஓலை உண்டு என்று தானுரைத்து
நலமாக சொக்க நாதரிடம் தாயார்
நற்கனவிலிதை தானுரைத்தார்.

20. சொல்லிய பின் அங்கு சென்று பார்த்திட
ஓலைகள் ஏழு இருந்ததுவாம்
எல்லா மந்திர பூசைகளும் - அங்கு
ஏட்டில் எழுதி இருந்தனவாம்.

21. இப்படி அற்புதம் ஆயிரம் செய்திட்ட
ஈஸ்வரிக்கு விழா காணவென்று
ஒப்பெரும் புரட்டாதி திங்களிலே - இங்கு
ஓங்கும் பெருவிழா பூசைகண்டார்.

22. கண்ணாளர் யாவரும் ஒற்றுமையாய்க் கூடி
காளிக்கு நல்விழா கண்டிடுவார்
நன்னவராத்திரி நாளினிதே தெய்வ
நாயகி விழாக்கோலம் பூண்டிடுவார்.

23. பத்துநாள் பூசையில் சக்தியின் பாதத்தை
பக்தியுடன் இங்கு போற்றிடுவார்
சக்தி தயாபரி பத்திர காளியும்
சார்ந்து வரம் நமக்கீந்திடுவார்.

24. சிங்கத்தில் ஏறிடும் காட்சியினை இங்கு
செப்ப முடியாது தோழியரே
எங்கள் பராசக்தி அன்னையை கண்டிட
இருவிழி போதாது தோழியரே.

25. ஒன்பதாம் நாளில் வீரகும்பம் வெட்ட
உத்தமி மாகாளி வீரருடன்
பண்புயர் ஓங்கிடும் பழுகாம வீதியில்
பவனி வாறதை பாருங்கடி.

26. ஆற்று அருகினில் வீற்றிருந்து - என்றும்
அன்புடன் ஆடிடும் வாரணனை
போற்றியே அம்மனும் பழுகாம வீதியில்
பவனி வாறதை பாருங்கடி.

27. வீதியில் கும்பங்கள் வைத்திடுவார்
பெரும் தீப விளக்குகள் ஏற்றிடுவார்
பாதத்தை நீரால் கழுவிடுவார் - தங்கள்
பாவத்தை போக்கிட வேண்டிடுவார்.

28. அண்ணனின் ஆலயம் சென்றடைந்து அம்மன்
ஆனந்த பூசையை தானுகந்து
கண்ணன் கருணையை பெற்ற மகிழ்வினில்
காரணி போறதை பாருங்கடி.

29. பத்தினி பாஞ்சாலி கோயிலிலே - எங்கள்
பார்வதி மாகாளி போயிருந்து
சத்தியம் வென்றிட வாள்பிடித்து - எங்கள்
தாயார் போவதைப் பாருங்கடி.

30. வேலனின் ஆலயம் சென்றடைந்து - தாயார்
வீரமிடுக்கோடு நடை நடந்து
சாலையில் நின்றிடும் பக்தருக்கு தாயார்
சார்ந்து வரம் கொடுத்தேகினாளே

31. கள்ளி மரத்தடி வந்திருந்து - அம்மன்
காடேறிக்கு பூசைதான் கொடுத்து
கள்ளி மரக்கம்பம் கைப்பிடித்து எங்கள்
காளி வாறதைப் பாருங்கடி.

32. மாவேற்குடாப்பதி சென்றடைந்து - அம்மன்
மாபெரும் பூசையை தானுகற்று
ஆவலுடன் நிற்கும் அடியவற்கு தாயார்
அள்ளி வரம் கொடுத்தேகினாளே.

33. பழுகாம வீதிகள் எங்கினுமே - உயர்
பக்தர்கள் அன்புளம் மிகக்கனிந்து
இளநீர் பால்த்யிர் தந்திடுவார் - பெரும்
இழைத்த பசியினை போக்கிடுவாள்.

34. தன்பதி நோக்கியே வந்திடுவாள் - அம்மன்
தக்க வரங்களை ஈந்திடுவாள்
பொன்மதி பேறேறு தீவினை நோக்கியே
பூமி குளிர்ந்திட நடைபயின்றாள்.

35. ஊரினை காத்திட வேணுமென்று - தாயார்
ஊரை வலமாக சுற்றி வந்து
பாரில் பெரும்பிணி நோய்கள் தொலைந்திட
பார்வதி நல்வரம் ஈந்தனளே.

36. எல்லையில் கற்பகப் பிள்ளையின் கோயிலில்
ஈஸ்வரி தாயார் போயிருந்து
நல்ல பெரும் பூசை தானுகந்து - எங்கள்
நாயகி வாறதைப் பாருங்கடி

37. பேறேறு தீவினை காவல் செய்து - பின்பு
முனைத்தீவு சீர்பதி சென்றடைந்து
சீறேறும் மாணிக்கப் பிள்ளையார் பூசையை
தேவி பராசக்தி தானுகந்தாள்.

38. பட்டாபுரம் தனை நோக்கிவந்து எங்கள்
பத்தினி நல்வரம் தான் கொடுத்து
எட்டுதிசையிலும் காவல் செய்து - தெய்வ
ஈஸ்வரி கோயிலுக் கேகினாளே.

39 பத்தாம் நாளன்று காலையிலே - அம்மன்
பக்தர்கள் எங்கும் புடைசூழ
சக்திக்கு நெல்குற்றும் பூசையினை கண்டு
சக்தி பிறக்குது தோழியரே.

40. அன்றைய காட்சியை கண்டு களித்திட
ஆயிரம் கண்களும் வேண்டுமடி
இந்த பிறப்பினில் ஈஸ்வரி பாதத்தை
இதயத்தில் ஏற்றி போற்றுவோமே.

41. ஆலய வீதிகள் எங்கிலுமே - உயர்
அழகு மிகுந்திடு நற்கடைகள்
சாலைகள் எங்குமே சென்றுமே பார்த்தால்
சந்தோசம் கொள்ளுமே தோழியரே.

42. வண்ண வண்ணப் பல நற்பொருட்கள்
எங்கும் வாங்கிடலாம் பின்னால் வாருமடி
கண்ணும் களித்திடும் காசும் முடிந்திடும்
காரியம் வென்றிடும் தோழியரே.

43. ஆடுகள் மாடுகள் கோழிகளும் இங்கு
ஆயிரமாக குவிந்திடுமே
கூடிடும் பக்தர்கள் கோடிசனம் - தெய்வ
கோதையின் வாசலில் தோழியரே.

44. நெல்லுகள் சீலைகள் தங்க நகைகளும்
நேர்த்திக் கடனாக வந்திடுமே
வல்லவி சக்தியின் வாசலிலே - மது
வந்து குவிந்திடும் பாருங்கடி.

45. கற்பூரச் சட்டிகள் ஏந்திடும் - கன்னியர்
காளியின் வாசலில் ஏராளம்
அற்புதமாகவே அங்கம் உருண்டிடும்
அன்பர்கள் ஆயிரம் பாருங்கடி.

46. மொட்டை அடித்திடும் குழந்தைகள் ஆயிரம்
மோகாம்புரி சக்தி வாசலிலே
மொட்டையில் பூசிய சந்தணம் குளிர்ந்திட
மோகனப் புன்னகை சிந்திடுமே.

47. தாகத்தைத் தீர்த்திட தண்ணீர் பந்தல்கள்
ஆயிர மாயிரம் தோழியரே
வேகநடைபோடு தோழியரே நாங்கள்
வித்தகி கோயிலை சென்றடைவோம்.

48. சக்தியின் அருகினில் இருந்திடும் தனயனாம்
முந்து விநாயகர் கோயிலிலே
பத்தியாய் பூசைகள் நடந்திடுமாம் சிறு
பாலகர் செய்கிறார் பாருங்கடி

49. ஆலய வாசலில் கோடிசனம் - பெரும்
ஆனந்தமாகவே கூடுகின்றார்
நன்மை சிறந்திடு சக்தியின் யாகம்
நன்றாய் நடக்குது தோழியரே.

50. யாகம் மிகவே நடந்திடுமாம் அங்கு
யோக வரங்களை பெற்றிடுவோம்
யாகத்தின் சக்தியால் சாந்தி நிறைந்திடும்
தாரணி குளிர்ந்திடும் தோழியரே.

51. யாகம் நடந்திடும் வேளையிலே - அம்மன்
யோக வடிவாக வந்திருந்து
யாகத்தில் ஆகுதி பெற்றிடுவார் - தெய்வ
யாகப் பெரும்பலன் எய்திடுமே.

52. யாகம் முடிந்ததன் பின்னாலே - எங்கள்
சக்திக்கு பூசை நடந்திடுமே
வாகான நேர்ப்பு கட்டிடும் இடத்திற்கு
வஞ்சியரே வாரீர் போய்ப்பார்ப்போம்.

53. அன்னதானம் மிக அற்புதண்டி இங்கு
அரும்பசி போக்கிட வழங்கிடுவார்
இன்னும் சுணங்காமல் வாருமடி பெண்ணே
இளைத்த பசியினைப் போக்கிடுவோம்.

54. உச்சிப் பொழுது சரிந்திடும் வேளையில்
உத்தமிக்கு நேர்ப்பு கட்டிடுவார்
அச்சம் விளைத்திடும் பரிகலத்திற்கன்னை
அமுது அளிப்பதைப் பாருங்கடி

55. கிழக்குத் தலைவாசல் வந்திருந்து - தாயார்
கிளர்ந்தெழும் பரிகலம் தனையழைத்து
உளங்களி கூர்ந்திட நேர்ப்பு அமுதினை
உத்தமி நேர்வதை பாருங்கடி.

56. மஞ்சள் அமுது கறிவகைகள் - தயிர்
மனது களித்திடும் பழவகைகள்
நெஞ்சம் நிறைந்தவள் நஞ்சணி கண்டனின்
நாயகி நேர்வதை பாருங்கடி.

57. மந்திர பூர்வமாய் நேர்ந்திடும் அமுதினை
மாகாளி கோயிலின் பின்புறத்தில்
தென்மேல் நிறுதியில் கட்டிடுவார் - அங்கு
திரிசூலரை காவல் வைத்திடுவாள்

58. மஞ்சள் அமுதினை மக்களுக்கு - தாயார்
வாரி வழங்கிடும் வேளையிலே
கொஞ்சம் கிடைத்தாலும் போதுமென்று மனம்
குதித்து துடிக்குமே தோழியரே.

59. நோய்களைத் தீர்த்திடும் சஞ்சீவியாம் - அதை
நோற்பு அமுதென்று தானளைப்பார்
தாயவள் தந்திடும் நோற்பு அமுதினை
தாழ் பணிந்து வாங்கி உண்டிடுவோம்.

60. நான்மணி நல்ல வேளையிலே - எங்கள்
நாயகி தீர்த்தம் ஆடிடவே
ஆண்மை மிகுந்த சிங்கத்தின் மீதேறி
அம்பிகை வாறதைப் பாருங்கடி.

61. எண்ணெ காப்பினை சிரமணிந்து - தாயார்
ஏகாந்த மாகவே நீராடி
கண்கள் குளிர்ந்திடும் பூசையை கண்டுமே
கருணை வடிவாகதான் நடந்தாள்.

62. சூலம்தனைத் தாயார் கைப்பிடித்து
கெட்ட துட்டர் அடங்கிட வேசம்கொண்டு
வாளதை கையினில் தாங்கிக் கொண்டு
எங்கள் வஞ்சி வாறதை பாருங்கடி.

63. தாயே தாயே என்று ஓலமிட்டு பக்தர்
தாயாரின் பின்னால் நடந்துவர
ஆதிபராபரி அம்பிகை சுந்தரி
ஆனந்தமாகவே நடை நடந்தாள்.

64. தீர்த்தங்கள் ஆடிய பின்னாலே - எங்கள்
தேவிக்கு அபிஷேகம் நடந்திடுமே
ஆர்த்தெழும் ஓம்சக்தி ஓசையிலே - தாயார்
அபிஷேக தீர்த்தம் ஆடிடுவாள்

65. முக்கனி சக்கரை பால் இளநீர் - உயர்
தக்க சுவையூட்டும் ஐந்தமிர்தம்
மிக்க அபிஷேகம் ஆடிடுவாள் - தாயார்
மேனி குளிர்ந்திட நின்றருள்வாள்

66. பஞ்சாமிர்த சுவை மெத்தவுண்டு - இங்கு
பாலாமிர்த பொங்கல் தானுமுண்டு
தஞ்ச மென்றுவரும் பக்தருக்கு தாயார்
தந்து பசிப்பிணி போக்கிடுவாள்

67. ஆடையலங்கார பூரணியாம் - இவள்
ஆபரண மணி மார்பழகி
தேடக்கிடையாத செல்வமடி - எங்கள்
தாயாரின் சேவடி போற்றுங்கடி.

68. காஞ்சி புரப்பட்டு தானுடுத்து - தாயார்
காளி வடிவாகி நின்றருள்வாள்
காஞ்சி நகராளும் காமாட்சி - தெய்வ
கருணை வடிவான மீனாட்சி

69. கொட்டும் தவிலோசை கேட்குதடி
எங்கும் குரவையிடும் ஒலி ஓங்குதடி
இட்ட மணிஓசை சங்கொலியும் - இங்கு
ஏகாந்த நாதமாய் கேட்குதடி

70. நள்ளிரவு நல்ல வேளையிலே - எங்கள்
நாயகியாள் தானும் வந்திருந்து
அள்ளியே அக்கினி தனையெடுத்து - அம்மன்
ஆனந்த தீக்குழி மூட்டினாளே.

71. வேப்பம் குழையதை கைப்பிடித்து - தாயார்
வெள்ளிப் பிரம்பினை தானெடுத்து
கூப்பும் கரத்துடன் நின்றிடும் பக்தர் முன்
கோதை நின்றக்கினி மூட்டினாளே.

72 நான்காம் சாமத்து வேளையிலே - எங்கும்
நாலாதிசை சேவல் கூவுதடி
ஓமெனும் மந்திரம் கேட்குதடி - தெய்வ
உத்தமிக்கு பூசை நடக்குதடி.

73. மேற்கு திசையிலே மடைபரப்பி - அங்கு
மிக்க அன்புடன் பூசை செய்து
வார்க்கும் மதுவுக்கு பூசை செய்து - அங்கு
வல்லவ ராகியை தானழைப்பார்.

74. சக்திக்கு பூசைதான் கொடுத்து - தாயார்
தக்க மதுப்பலி தானருந்தி
சித்திகள் நல்கிடும் தேவி பராசக்தி
சிந்தை நிறைபலி தானுகந்தாள்.

75. பன்னி ரெண்டாயிரம் மடைபரப்பி - அங்கு
பாலாமிர்தப் பொங்கல் தான்படைத்து
அன்பு நிறைந்திடும் ஆனந்தப் பூசையை
ஆதி பராசக்தி தானுகந்தாள்

76. எழுமணி காலை வேளையிலே - தெய்வ
ஈஸ்வரி தீயில் இறங்கிடவே
தாள் பணிந்தேற்றிடும் தொண்டருடன் - சக்தி
தக்க அணிமணி தானணிந்தாள்.

77. பச்சை நிறப்பட்டு தானுடுத்து - தாயார்
பத்திரம் தன்னையே கைப்பிடித்து
அச்சம் அகன்றிட வாள்பிடித்து - அன்னை
அக்கினியை நோக்கி தான் நடந்தாள்.

78. அக்கினி தன்னையே சுற்றிவந்து - அம்மன்
ஆனந்த கற்பூர தீபம் காட்டி
மிக்க மலர்வகை தானெடுத்து - அம்மன்
மேவி நடந்தாளே ஆலயத்துள்.

79. அரகர கோசம் எழுகுதடி - இங்கு
அடியார்கள் ஆயிரம் கூடுகிறார்
நிரைநிரையாகவே வந்து நின்றார் - அம்மன்
நெருப்பில் நடப்பதை காண்பதற்கே.

80. தீயில் குளிர்த்திட்ட தொண்டர் எல்லாம்
இங்கு தீர்த்தங்கள் ஆடியே வந்துநின்று
தாயாரின் பின்னாலே தான்நடந்து - தொண்டர்
சத்தியுடன் தீயில் தான்நடந்தார்.

81. தீயிலே தாயாரும் தான்நடந்தாள் - எங்கள்
தீவினை யாவும் எரிந்திடவே
தாயாரின் பின்னாலே கன்றுகள்போல் செல்லும்
சக்தி அடியாரை பாருங்கடி.

82. அக்கினி தன்னிலே தான்நடந்தாள் - அம்மன்
அபய கரத்தினை காட்டி நின்றாள்
தக்கன் மகளான சக்தி தயாபரி
தார் கோதை அக்கினி ஆடினாளே.

83. பற்றி எரிந்திடும் நெருப்பினிலே - பெரும்
பக்தர்கள் யாவரும் நடக்கையிலே
பற்றினை சக்தியின் பாதத்திலே வைத்து
பரவசம் அடைவதை பாருங்கடி.

84. மாந்தரில் தெய்வங்கள் வந்துநின்று - இந்த
மாபெரும் சக்தியாய் உருமாறி
பாந்தமாய் வாக்குகள் திட்டப்பண்ணி - தெய்வ
பக்தி வளர்வதைப் பாருங்கடி

85. தெய்வங்கள் ஆடிடும் கோலங்களை - இங்கு
செப்ப முடியாது தோழியரே
மெய்யாக வந்துநீ பார்ப்பீரானால் - உந்தன்
மேனி சிலிர்க்குமே தோழியரே.

86. சாட்டை பெலியினை தானெடுத்து - தெய்வம்
சந்தோசமாகவே ஆடிவந்து
கூட்டு மடைப்பெலி தானெடுத்து - தெய்வம்
கொலுவில் தனித்திடும் தோழியரே.

87. தீயில் குளிர்த்திட்ட வேகம் தணிந்திட
தேவியும் ஊர்வலமாகி வந்து
வாயிலின் முன்னாலே மஞ்சள் குளிர்த்திடும்
வடிவதனைப் பாடியடிப்போமே,

88. மஞ்சள் தீர்த்தத்தை கையெடுத்து - அம்மன்
மக்களுக் மெல்லாம் தான்தெளித்து
பஞ்சம் பிணி துன்பம் பாரில் தொலைந்திட
பார்வதி மஞ்சள் நீராடினாளே

89. மரண பயங்கள் தொலைந்திடவே - உயர்
மக்களின் வாழ்வு சிறந்திடவே
கருணை நிறைந்தன்பு நெஞ்சிலே தங்கிட
காரணி மஞ்சள் நீராடினாளே.

90. தண்டை சிலம்புகள் காலில் ஒலித்திட
தத்திமித் தோமென தாளம் இசைத்திட
தண்டமிழ்த் கும்மிகள் பாடி மகிழ்ந்திட
தார்கோதை மஞ்சள் நீராடினாளே.

91. மஞ்சள் நீராடியே வீதிவலம் வந்து
மக்களுக்கு நல்ல வாக்களித்து
தஞ்சம் என்றே மக்கள் பாதம் தொழுதிட
பார்வதி மஞ்சள் நீராடினாளே

92. மஞ்சள் நீராடியே வீதிவலம் வந்து
மக்களுக்கு நல்ல வாக்களித்து
தஞ்சம் என்றே மக்கள் பாதம் தொழுதிட
தாயார் வரமளித் தேகினாளே.

93. ஆயுத் பூசைநல் வேளையிலே - அங்கு
அன்னை யடியார்கள் யாவருமே
வாயும் மனத்தையும் தானடக்கி - எங்கும்
வல்லவி தன்புகழ் பாடிடுவோம்.

94. பூசைக்கு கந்த பொருட்களையே அந்த
பூசையில் எங்கும் பரப்பி வைத்து
ஆசையாய் அங்கு பூசை செய்யும் - பக்தி
அன்பினைப் பாடியடிப்போமே.

95. விஜயதசமி நன் நாளினிலே - அன்னை
வீரதுர்க்கை வடிவாகி வந்து
பயமெல்லாம் தீர்த்திடும் பத்திரகாளியின்
பாதத்தை பாடிப்பணிவோமே.

96. மலருடன் பத்திரம் கையெடுத்து - அந்த
மாகாளி தன்புகழ் பாடிடுவோம்
மலர்விழி மூடியே கண்வளர தாயார்
மங்களத் தாலாட்டு பாடிடுவோம்.

97. அடைக்கலம் அடைக்கலம் என்று சொல்லி
இங்கு ஆயிரம் கம்மியர் ஒன்றாகி
அடையல் அமர்ந்திடு அம்பிகை காளியின்
பாத கமலத்தை போற்றிடுவார்.

98. சடங்கு முடித்திட்ட பின்னாலே - எங்கள்
சக்திக்கு காவலாய் உள்ளவரின்
வடைமாலை பொங்கல் றொட்டிகள் வைத்து
வைரவருக்கு பூசைதான் கொடுப்பார்.

99. எட்டாம் சடங்கு நன்நாளிலே - இங்கு
ஏராளமாய் பக்தர் கூடிடுவார்
அட்டவைரவர் வேள்வியை கண்டுமே
அன்பு மனதுடன் சென்றிடுவார்.

100. வாரம் தோறும் வெள்ளிக் கிழமையிலே
எங்கள் வைரவருக்கு பூசை மிக்கவுண்டு
பாரம் இவள் என்று சொல்லிச் சொல்லி
பக்தர் பல்லாயிரம் வந்து கூடிடுவார்.

101. உள்ளங்கள் யாவுமே ஒன்றாகும் - இந்த
உண்மையை பாடி யடியுங்கடி
கள்ளங்கபடமும் பொய்யு மகன்றிட
காளியை பாடி யாடுங்கடி.

102. விஸ்வகுலம் எங்கும் விழங்கி துலங்கிட
வீரம்மா காளியை போற்றுங்கடி
அஸ்ட வரங்கள் அனைத்துமே பெற்றிட
அம்மையை பாடியடியுங்கடி.

103. கம்மியர் யாவரும் ஒற்றுமையாய் வரும்
காலத்தைப் போற்றிநின் றேற்றுங்கடி
வம்புடன் சூதுகள் வஞ்சனை போயிட
வல்லவியை பாடி யாடுங்கடி-

104. மாதமும் மாரி மழை பொழிய - எங்கும்
மக்களும் நற்சுகம் பெற்றிடலே
மாதாவின் பாதத்தை மறவோம் என்றின்ப
மங்கள கும்மி கொண்டாடுங்கடி.

105. போரேறு தீவது தான் வாழி - எங்கும்
புகழ்மிகு கம்மியர் தானவாழி
சீரேறு சைவமதம் வாழி - எங்கும்
செல்வ வயல் வளம்தான் வாழி.

106. சீரேறு சைவமதம் வாழி - எங்கும்
செல்வ வயல் வளம்தான் வாழி
பாரேறு செந்தமிழ் தாய் வாழி
அன்பும் பக்தியும் தர்மமும் தான்வாழி

107. ஏழை அடியவன் கண்மணி தாசன்
இயற்றி படித்திட்ட கும்மியிசை
வாழும் உலகினில் வாழியவே - எங்கும்
வையம் நிறைந்திட வாழியவே.

108. மங்களக் கும்மியிசை வாழ்க - எங்கும்
மாணிலம் தன்னில் அருள் வாழ்க
சிங்கமிசை ஏறும் பத்திர காளியின்
சேவடிக்கு கும்மி மங்களமே.

109. மங்களம் மங்களம் மங்களமே - எங்கும்
மாகாளி கும்மிக்கு மங்களமே
தங்குக மங்களம் சக்தி புகழ் பாடி
தரணிக்கு என்றும் மங்களமே.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

## பஜனைப் பாடல்கள்

அரகரோகரா அரகரோகரா
அரகரோகரா அரகரோகரா
(அரக ....... )

அம்மை பத்ர காளிக்கு அரகரோகரா
அகிலாண்ட ஈஸ்வரிக்கு அரகரோகரா
(அரக......... )

எம்மையாழும் ஈஸ்வரிக்கு அரகரோகரா
ஏகாந்த ஜோதிக்கு அரகரோகரா
(அரக ....... )

காளிதேச காரணிக்கு அரகரோகரா
கால பைரவிக்கு அரகரோகரா
(அரக ...... )

ஓங்கார சக்திக்கு அரகரோகரா
உலகாழும் நாயகிக்கு அரகரோகரா
(அரக.........)

ஓம்சக்தி ஓம்சக்தி அரகரோகரா
ஓம்சக்தி பராசக்தி அரகரோகரா
(அரக .......)

# அன்பருள்ளம் நிறைந்தவளே

அன்பருள்ளம் நிறைந்தவளே வா வா அன்னையே
ஆனந்தமாய் எம்மையாழ வா வா அன்னையே
(அன்ப ........)

இன்பநலம் தந்தருள வா வா அன்னையே
ஈஸ்வரியே என்றழைக்க வா வா அன்னையே
(அன்ப ....... )

உலகை காக்க ஓடியே நீ வா வா அன்னையே
ஊக்கம் சக்தி ஓங்கிடவே வா வா அன்னையே
(அன்ப...... )

எங்கும் நிறை ஜோதியே நீ வா வா அன்னையே
ஏகாந்த பூரணியே வா வா அன்னையே
(அன்ப.........)

ஐங்கரனை தந்தவளே வா வா அன்னையே
ஒற்றுமையாய் நாம் வாழ வா வா அன்னையே
(அன்ப.........)

ஓங்கார நாயகியே வா வா அன்னையே
ஔவியம் தீர்ப்பதற்கு வா வா அன்னையே
(அன்ப ........)

அஃகாரத் துட்பொருளே வா வா அன்னையே
ஆதியே ஜோதியே நீ வா வா அன்னையே
(அன்ப ........ )

## காளி கையில் சூலம்

காளி கையில் சூலம் ஏந்தி
கலியின் வாதை போக்குவாள்
ஊளி வடிவாக வந்து
உலக துன்பம் நீக்குவாள். (காளி.........)

விம்முகின்ற மக்களின்
விடிவுக்காக ஓர்தினம்
அம்மை காளி துர்க்கையாக
வடிவெடுத்தாள் உலகிலே. (காளி .....)

உலகில் இன்ப துன்பம் என்றும்
உண்மை ஒன்றும் இல்லையே
கலகம் தீர்ந்து உலகில் என்றும்
அமைதி காண வேண்டுமே. (காளி......)

மக்கள் இந்த உண்மையை
மறவாதிருக்க வேண்டியே
சக்தி சக்தி சக்தி என்று
போற்றி நின்றார் பக்தர்கள். (காளி ......)

எங்கள் காளி அம்மை என்று
உலக மக்கள் போற்றவே
எங்கள் சக்தி ஆதிசக்தி
இனிதமர்ந்தாள் மனதிலே. (காளி.......)

கெட்ட துட்டர் அடங்கிட
கிளர்தெழுந்தாள் காளியாய்
பட்டமரம் இலை துளிர்க்க
பவனி வந்தாள் உலகிலே. (காளி......)

அச்சம் ஒன்றும் இல்லை என்று
அம்மை கையைக் காட்டினாள்
இச் செகத்தில் எந்தன் நாமம்
ஓதிப்பாடு என்றனள். (காளி........)

பக்தர் எல்லாம் ஒன்றாய் கூடி
பத்திரையை பாடினர்
மிக்க அடியார்மீது தாயார்
அருள் பொழிந்து ஏகினாளே. (காளி ......)

# தேவி உன்னை சரணடைந் ......

தேவி உன்னை சரணடைந்தோம்
எங்கள் காளியம்மா
தீவினையை போக்கிடுவாய்
எங்கள் காளி அம்மா. (தேவி.........)

சிங்கத்தின் மீதேறி
எங்கள் காளி அம்மா
தேவியரே பவனி வந்தாய்
எங்கள் காளி அம்மா. (தேவி.........)

சூலத்தை ஏந்திடுவாள்
எங்கள் காளி அம்மா
துட்டரை அடக்கிடுவாள்
எங்கள் காளி அம்மா. (தேவி..... ...)

ஆணவத்தை போக்கிடுவாய்
எங்கள் காளி அம்மா
அன்பினுக்கு அடங்கிடுவாய்
எங்கள் காளி அம்மா. (தேவி ........)

நவராத்திரி நாளினிலே
எங்கள் காளி அம்மா
நவசக்தி யாயிருப்பாய்
எங்கள் காளி அம்மா (தேவி ........)

போரேறு தீவினிலே
எங்கள் காளி அம்மா
புகளோங்க கொலுவிருந்தாய்
எங்கள் காளி அம்மா. (தேவி ........)

எல்லா மக்களையும்
எங்கள் காளி அம்மா
ஏற்றமதாய் காத்திருந்தாய்
எங்கள் காளி அம்மா. (தேவி.........)

காளி தேசம் தன்னினிலே
எங்கள் காளி அம்மா
கருணையுடன் குடியிருந்தாய்
எங்கள் காளி அம்மா. (தேவி.........)

ஓங்கார சக்தியரே
எங்கள் காளி அம்மா
உனதடியை நாம் பணிந்தோம்
எங்கள் காளி அம்மா. (தேவி ......)

# வீரசக்தி ஞானசக்தி

வீரசக்தி ஞானசக்தி வா வா சக்தியே
பாரெல்லாம் துதித்திடவே வா வா சக்தியே,
(வீர ... ...)

ஆதிநாத பொருளான தாயே சக்தியே
அண்டமெல்லாம் காத்தருள்வாய் தாயே சக்தியே
சோதிவடிவான சிவ தாயே சக்தியே
சூலம்தனை ஏந்திய துர்க்கையே சக்தியே.
(வீர ......)

காளிகோட்டம்தனில் அமர்ந்தாய் தாயே சக்தியே
காரணமாய் உலகை ஆளும் தாயே சக்தியே
யாழிபரி ஏறிவரும் தாயே சக்தியே
யாகயோக மானசிவ தாயே சக்தியே.
(வீர ....)

மாதுளம்பூ நிறத்தழகி தாயே சக்தியே
மங்கையற்கு குங்குமத்தாள் தாயே சக்தியே
மாதவரின் குலக் கொழுந்தே தாயே சக்தியே
மாயவன் தன் சோதரியே தாயே சக்தியே.
(வீர ...)

சக்தி புகழ் பாடிடவே தாயே சக்தியே
சஞ்சலத்தை நீக்கிடுவாள் தாயே சக்தியே
நக்கனிடப் பாகமுற்றாய் தாயே சக்தியே
நன்மை எல்லாம் தந்திடுவாய் தாயே சக்தியே
(வீர .....)

தானதரும யோகம் வெல்ல தாயே சக்தியே
தாரணியில் நீயுத்தாய் தாயே சக்தியே
ஞானதவ ஜோகமான தாயே சக்தியே
நானிலத்தில் அறம் வளர்த்தாய் தாயே சக்தியே.
(வீர.. ......)

தொல்லை வினை தீர்ப்பவளே தாயே சக்தியே
துக்கமெலாம் தீர்ப்பவளே தாயே சக்தியே
தில்லையிலே ஆடும் சிவன் தேவியே சக்தியே
தெய்வீகப் பேரொளியே தாயே சக்தியே.
(வீர ......)

மங்களமதான சிவ தாயே சக்தியே
மங்களங்கள் தந்திடுவாய் தாயே சக்தியே
சிங்கமதில் ஏறிவரும் தாயே சக்தியே
சேவடியை போற்றுகிறோம் ஓடிவா சக்தியே.
(வீர........)

# மங்களம்

மங்களாய மங்களாய மங்களாய மங்களம்
மங்களேஸ்வ ரெட்ஷகாய மங்களாய மங்களம்.
(மங்க ...... )

பொங்குமருள் சக்தி ஞான பூரணிக்கு மங்களம்
புகளோங்கும் கணபதிக்கும் வேலனுக்கும் மங்களம்
சிங்கமிசை ஏறிவரும் காளிக்கு மங்களம்
தெய்வீகப் பக்தருக்கும் சான்றோர்க்கும் மங்களம்.
(மங்க .. .. )

எங்குமே செந்நெல் விளை கழனிக்கு மங்களம்
இந்துமத பல்மதங்கள் உலகோங்க மங்களம்
துங்கமிசை போரேறு தீவினுக்கு மங்களம்
துய்யமெய் அறமோங்க தூர்க்கைக்கு மங்களம்
(மங்க )



# இந் நூலாசிரியர்
# கவிஞர் கண்மணிதாசனின் நூல் விபரங்கள்

## வெளிவந்தவை

1. ஏறாவூர் விநாயகர் வரலாற்று அகவல்
2. சிந்தை திறக்க சில துளிகள் (கையேடு I)
3. சக்தியின் மகிமையும் நவராத்திரி தத்துவமும்
4. கந்த விரதமும் சஷ்டியின் மகிமையும்
5. இந்து சமய மக்களே சிந்தியுங்கள்.
6. பத்திரகாளியம்மன் பதிகம், கும்மி, பஜனை பாடல்கள்

## வெளிவர இருப்பது

- ஸ்ரீ இராமகிருஷ்ண பரம்மகம்சர் பிள்ளைத் தமிழ்
- வீரத்துறவி (விவேகானந்தரின் மகாகாவியம்)
- தூய அன்னை (சாரதா தேவியார் மகாகாவியம்)
- வீரத்துறவியின் வீரமுழக்கம் (கவிதைத் தொகுதி)
- கிழக்கிலங்கையின் ஒலிக்கீற்றுக்கள் (மட்டக்களப்பு புலவர்கள், பெரியோர்களின் வரலாறு)
- ஏறாவூர் மான்மியம் (ஏறாவூரின் பூர்வீக வரலாறு)
- ஆசிரியத்துவம்
- கல்வியும் கருத்தனமும்
- சமகாலக் கல்வியும் மாணவர்களும்
- இன்றைய பாடசாலைகளில் இந்துசமயக் கல்வி
- இந்துக்கள் ஏன் மதம் மாறுகின்றார்கள்
- சிவராத்திரியா? சினிமா ராத்திரியா?
- மட்டுநகர் தந்த இரு மணிகள் (புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, புலவர்மணி அல்-ஹாஜ் சரிபுதீன் வாழ்க்கை ஒப்பியல் நோக்கு)
- சுவாமி விபுலானந்தர் அவதார புருஷர்
- இன்பத்தமிழ் தந்த இலக்கிய கருவூலம்
- கவிதைத் தொகுதி .
- தாய்மை

**இன்னும் பல நூல்கள்.**